பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

PERSONAL CLASSES
B.M.C. FRONT LANE
JAFFNA

A/L 89, 90 & 91
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

PHY. சத்தியசீலன்
CHE. மதுரமணி
BOT. சர்வானந்தா
ZOO. ஈஸ்வரநாதன்
PURE. APP. } விஜயகுமார்

# உதயன்

விலை
ரூ2/50

A/L 91
பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது

A/L 89

மாணவர்களுக்கு
வகுப்புகள் ஆரம்பமானதும்
பயிற்சிப் பரீட்சைகள்
நடைபெறும்.

PERSONAL CLASSES
B. M. C FRONT LANE,
JAFFNA.

சுடர்: 4 சுக்கில ஞூ ஆடி மீ 03 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 14 (18 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 191

### பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையில்

# அமிர் யோகேஸ் பூதவுடல்கள் தீயுடன் சங்கமம்!

## யாழ்நகரில் நேற்று சோக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. அ. அமிர்தலிங்கம், திரு வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் பூதவுடல்கள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இதற்கென அமைக்கப்பட்டிருந்த இரு சிதைகளில் வைக்கப்பட்டு நேற்று மாலை இருள் பரவும் வேளையில் தியுடன் சங்கமமாகின.

பல்லாயிரக்கணக்கான மக்கள் அழுதவண்ணம் கூடி நிற்க இந்தச் சோக நிகழ்வு இடம் பெற்றது.

கூட்டணித் தலைவர்கள் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் ஆகியோரின் பூதவுடல்கள் நேற்றுக் காலை 10.30 மணி அளவில் மட்டக்களப்பில் இருந்து இலங்கை விமானப்படை விமானம் மூலம் பலாலிக்குக் கொண்டு வரப்பட்டன.

பூதவுடல் தாங்கிய பேழைகள் தனித்தனியே ஒவ்வொரு ஹெலிக்கொப்டர்களில் ஏற்றப்பட்டன.

ஒரு ஹெலிக்கொப்டர் அமிர்தலிங்கத்தின் பூதவுடலுடன் நேரே அவரது சொந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நேற்றும் ஸ்தம்பித நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

கூட்டணித் தலைவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ். மாவட்டத்தில் கடைகள் சினிமா அரங்குகள் நேற்று மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்களும் இயங்கவில்லை.

தேநீர்க்கடைகள் மட்டும் திறந்திருந்தன.

எங்கும் வாழைகளும் தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

இ. போ. ச. மினிபஸ் சேவைகள் இடம்பெற்றன. (இ 3)

## மட்டக்களப்பில் அஞ்சலி நிகழ்ச்சி

மட்டக்களப்பு, ஜூலை 18

ஞயிறு மாலை 5. 30 மணியளவில் கூட்டணித் தலைவர்களின் பூதவுடல்கள் மட்டக்களப்பை வந்தடைந்தபோது ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அமைச்சர்கள் தொண்டமான் ஜனாப் எல். ஏ. ஆர். மன்சூர் மற்றும் கூட்டணியின் முன்னாள் எம். பிக்கள் வி. என். நவரத்தினம், இரா சம்பந்தன், வி. ஆனந்த சங்கரி ஆகியோரும் இதில் அடங்கி இருந்தனர். இந்து—கிறிஸ்தவ தேவாரங்களும் பாடப்பட்டன. (ஒ-3)

### அமைதிப் படை விலகல் விவகாரம்:

# 29ஆம் திகதி காலக்கெடுவை ராஜீவ் நிராகரிப்பு!

## புதுடில்லியில் திட்டவட்டமான அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 18

ஜூலை 29ஆம் திகதிக்கு முதல் அமைதிப்படை வாபஸ் பெறவேண்டும் என்று இலங்கை அரசு விதித்திருக்கும் நிபந்தனையை ஏற்க முடியாது.

— இவ்வாறு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி புதுடில்லியில் திட்டவட்டமாக அறிவித்தார்.

அமைதிப்படையை விலக்குவதில் தேக்கநிலை ஏற்பட்டிருப்பதற்கு இலங்கை அரசு தான் காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

'6 நாள் - 3 நாடுகள்' பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று புதுடில்லி திரும்பினார்.

விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசுகையில் திரு. காந்தி இவ்வாறு கருத்து வெளியிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதுபற்றி கூறியிருந்தேன்.

துரதிஷ்டவசமாக இலங்கை ஜனாதிபதியிடமிருந்து வந்த பதில் சாதகமானதாக அமையவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு அதிகாரப் பகிர்வு வழங்குவது இந்திய - இலங்கை உடன்படிக்கையின் ஓர் அங்கமாகும்.

துரதிஷ்டவசமாக உறுதியளிக்கப்பட்டபடி அது நிறைவேற்றப்படவில்லை.

இலங்கைத் தமிழர்கள் இலங்கை அரசை நம்புவதற்குத் தயாராக இல்லை. அவர்களின் பாதுகாப்புக்கு இந்தியா உத்தரவாத நாடாக இருந்தாக வேண்டும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை பின்வாங்க முடியாது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் பல கடமைகளை இந்திய அரசு இன்னமும் செய்யவேண்டி இருக்கின்றது.

இந்த நிலையில் ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை பின்வாங்குமானால் அது அபாயகரமான சூழ்நிலையையே ஏற்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து வந்த விசேட பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கூட்டணித் தலைவர்களின் பூதவுடல்கள் தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு அருகாமையில் விசேடமாக அமைக்கப்பட்ட கொட்டகையில் நேற்று வைக்கப்பட்டிருந்த சமயம் இந்தியத் தூதுவர் திரு. மேஹ்ரோத்ரா இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் நட்வர்சிங் தமிழ் நாட்டின் முன்னாள் அமைச்சரும் அ. தி. மு. க. மூத்த பொதுச்செயலாளருமான திரு. ராகவானந்தம், இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு பொதுச்செயலாளர் சேத முத்து யசோதா, திரு. இரா ஜனார்த்தனன் தமிழ்நாடு இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் செயலாளர் ஜனாப் எஸ். ஏ. காஜா மொஹிதீன் குடிபெயர்ந்த உரிமைகள் சங்கத் தலைவரும் தி. மு. க. பிரமுகருமான திரு மணவைத்தம்பி உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர், (உ-3)

## அரசு பிரதிநிதியாக காமினி

யாழ்ப்பாணம், ஜூலை 18

இலங்கை அரசு சார்பாக அமைச்சர் திரு. காமினி திஸ்ஸநாயக்கா நேற்று இடம் பெற்ற கூட்டணித் தலைவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டார்.

துணை அமைச்சர் ஜனாப் அபுசாலியும் அமைச்சர் காமினியுடன்வந்திருந்தார்.

நீண்ட காலத்துக்குப் பின்னர் கூட்டணிப் பிரமுகர்களை நேற்று நகரில் காணக்கூடியதாக இருந்தது.

முன்னாள் கூட்டணி எம்.பிக்களான வி. என். நவரத்தினம், நீலன் திருச்செல்வம், வி. ஆனந்தசங்கரி மற்றும் மாவை சேனாதிராசா உட்பட பல கூட்டணிப் பிரமுகர்களை இறுதிச்சடங்கு நிகழ்ச்சிகளின் போது காணக்கூடியதாக இருந்தது. (ஒ-3)

## அமிரின் மரணவிசாரணை தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 18

கூட்டணிப் பிரமுகர்கள் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் மரணம் தொடர்பான விசாரணைகளின் தீர்ப்பு வழங்கப்படுவதை கொழும்பு பதில் நீதிவான் எம். எம். ஏ. கபூர் ஒத்திவைத்தார்.

கூட்டணிப் பிரமுகர்களைச் சுட்டதாகக் கூறப்படும் மூவரும் பின்னர் சுட்டுக்கொல்லப் பட்டார்கள் அல்லவா?

அவர்களது பிரேத பரிசோதனை அறிக்கை தமக்குக் கிடைக்காததனாலேயே மரண விசாரணைத்தீர்ப்பை நீதிவான் ஒத்திவைத்தார். (உ-1)

## புதிதாகத் திருப்பம் ஏதும் விசாரணையில் இல்லையாம்

கொழும்பு, ஜூலை 18

கொழும்பில் படையினர் ஆயுதங்களை மீட்ட சம்பவத்திற்கும் கூட்டணித் தலைவர்கள் கொலைச் சம்பவத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

இந்த கொலைச் சம்பவங்கள் பற்றிபொலீஸார்நடத்திவரும் விசாரணையில் முக்கிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாக இலங்கை வானொலி தெரிவித்திருப்பதும் உண்மையானது அல்ல — இவ்வாறு கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூவரும் கொல்லப்பட்டு விட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று அமிர், யோகேஸ் விடுக்கும் செய்தி என்ன?

### அமைச்சர் காமினி விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

'ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இந்த மைதானத்தில் துடிப்புடன் பேசிய திரு. அமிர்தலிங்கமும், திரு. யோகேஸ்வரனும் இன்று இதே மைதானத்தில பேழைக்குள் மௌனமாக உறங்குகிறார்கள்.

அவர்கள் அன்று பேசியதை விட, இன்று மௌனம் சாதித்து வெளிப்படுத்துவது சக்தி மிக்கதாக இருக்கி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு காண உழைத்தவர்கள்

### அமைச்சர் நட்வர்சிங் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 18

அமிர், யோகேஸ் இருவருமே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதையே தமது மூச்சாகக் கொண்டு உழைத்தவர்கள்.

அவர்கள் நோக்கம் நிறைவேற நாம் அனைவரும் உழைக்க வேண்டும்.

இந்திய அமைச்சர் திரு. நட்வர்சிங் தமது இரங்கலுரையில் இப்படித் தெரிவித்தார்.

"துக்ககரமான சூழ்நிலையில் இன்று நாம் கூடியுள்ளோம், இந்திய மக்களின் சார்பில் அஞ்சலி செலுத்தும்படி பிரதமர் ராஜீவ் காந்தி விடுத்த ஆணையின்படி நான் வந்துள்ளேன்.

இலங்கை-இந்திய மக்களின் மதிப்பைப் பெற்ற இந்தத் தலைவர்களுடன் நான் பல முறை பேசியுள்ளேன்.

இவர்கள் மக்களால் எவ்வளவு நேசிக்கப்பட்டார்கள் என்பதை இக்கூட்டம் நிரூபித்துவிட்டது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றி அமைச்சர் காமினி இங்கு பேசினார் இதுபற்றி இங்கு கூறும் நிலையில் நான் இல்லை.

ஒப்பந்தத்தின் மூலம் தமி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமிரின் வழிகாட்டலிலேயே இயக்கங்கள் உருவாகின

### மாகாண முதல்வர் இரங்கலுரை

யாழ்ப்பாணம், ஜூலை 18

இன்றுள்ள இயக்கங்கள் யாவும் அமரர் அமிர்தலிங்கத்தின் உணர்வுகளிலும், வழிகாட்டலிலும் இருந்தே உருவானவை. இயக்கத் தலைவர்களுக்கு தலைவர்கள் என்னும் நெஞ்சுத் துணிவு வளர உதவியவர் அவரே''

— இப்படிக் கூறினார் வடக்கு-கிழக்கு மாகாண முதல்வர் அ. வரதராஜப் பெருமாள்

கூட்டணித் தலைவர்களின் அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

இன்று படுகொலைகள் வளர்ந்துகொண்டே போகின்றன. இது எங்கே போய் முடியப் போகிறதோ என்று தெரியவில்லை.

மக்கள் விடுதலைப் போராட்டத்தில் இது காலம் வரை பங்குபற்றிய இளைஞர்கள் யாவரும் அமிரின் வழிகாட்டலில் வந்தவர்களே என்பதை உணரவேண்டியது அவசியம்.

இவர்களின் திடீர் இழப்பு தமிழ் மக்களின் மனத்தில் மாற்றம், எழுச்சி ஆகியவற்றை உருவாக்கும் என எதிர்பார்க்கிறோம் — என்றும் மேலும் கூறினார். (உ-3)

### இந்தியாவைப் பொறுத்தவரை

# தேஷ்முக் விஜயம் வெற்றி?

புதுடில்லி, ஜூலை 18

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் சிரேஷ்ட செயலாளர் பி. ஜி. தேஷ்முக் இலங்கையில் மேற்கொண்ட விஜயம் வெற்றியளித்திருப்பதாக இந்தியப் பிரதமரின் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு வரமுன்னர் திரு. தேஷ்முக், அமெரிக்காவுக்குப்போய் வெள்ளை மாளிகையில் சில உயரதிகாரிகளைச் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்சினை உட்பட பல விடயங்களில் இந்தியத் தலைமையின் அணுகுமுறை பற்றி விளக்கமளித்திருந்தார்.

திரு. தேஷ்முக்கை இலங்கைக்கு அனுப்பிவைக்குமாறு ராஜீவிடம் ஆலோசனைசொன்னவர் இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தான் எனக் கூறப்படுகிறது.

தேஷ்முக் போன்ற மூத்த

(4 ஆ பக்கம் பார்க்க)

## நெடுங்கேணி தாக்குதலில் ஐந்து ஜவான்கள் பலி!

கொழும்பு, ஜூலை 18

ஒட்டுசுட்டான் நெடுங்கேணிப் பகுதியில் ஞாயிறு அதிகாலை ஏழுமணியளவில் நடைபெற்ற திடீர் மோதல் சம்பவம் ஒன்றில் ஐந்து ஜவான்கள் உயிரிழந்ததாக கொழும்புக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஜவான்களின் ஐந்து ஆயுதங்களும், இரு தொலைத்தொடர்பு சாதனங்களும் அபகரிக்கப்பட்டதாகவும், தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் உயிரிழந்ததாகவும் கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (உ-1)

## பரீட்சையின்றியே பட்டம் இறுதியாண்டு மாணவருக்கு

### அமைச்சர்கள் குழு ஆராய்வு

கொழும்பு, ஜூலை 18

இறுதிப் பரீட்சை எடுக்காத சுமார் 4ஆயிரத்து 700 பல்கலைக்கழக மாணவருக்கு பட்டங்களை வழங்குவது பற்றி ஆராயும்படி அமைச்சர் மட்டக்குழு ஒன்றை அமைச்சரவை நியமித்துள்ளது.

பல்கலைக்கழகங்கள் பாதுகாப்புக் கருதி தற்போது மூடப்பட்டுள்ளன. எப்போது இவை மீண்டும் திறக்கப்படும் என்று தெரியாத, நிச்சயமற்ற நிலைமை இருக்கிறது.

இதனால் பல்கலைக்கழகங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பல்கலைக்கழகம் புகுந்த உடனே டிகிறிப் பட்டம் குடுக்கிற நிலையும் வரலாம் கண்டியளோ?. ?!

### சுபநேரம்

18—07—1989

ஆடி 03 —செவ்வாய்க்கிழமை
நக்ஷத்திரம்: பூராடம்
சுபநேரம்:
10.30 முதல் 12.00 வரை
ராகுகாலம்:
03.00 முதல் 04.30 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
பூரணை விரதம்

## முதலாம் திகதி மீண்டும் பாடசாலைகள்

கொழும்பு, ஜூலை 18

நாட்டின் சகல பாடசாலைகளும் வருகிற மாதம் முதலாம் திகதி மூன்றும் தவணைக்காக மீண்டும் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது. (ஒ-எ)

## தேடுதல்

வல்வெட்டித்துறை, கொற்றாவத்தை, நெடியகாடு, பொலிகண்டி, திருவில் வேவியடி ஆகிய இடங்களில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து சுற்றிவளைப்பும் தீவிர தேடுதல் வேட்டையும் இடம் பெற்று வருகிறது.

நேற்றுக்காலையும் இப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை இடம் பெற்றது. (உ-160)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் நிறுத்தப்பட்டதால் ப. நோ. கூ - சங்கங்கள் அவதி

யாழ்ப்பாணம், ஜூலை 18

கடன் வழங்குவதை மக்கள் வங்கி தற்காலிகமாக நிறுத்தியுள்ளதால் யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள் நிதி நெருக்கடியில் உள்ளன என்று ப. நோ. கூ. சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்கள் வங்கியின் யாழ் - பிராந்திய அலுவலகம் கடந்த ஐந்தாம் திகதி சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் மத்திய வங்கியின் ஆணைப்படி எம் தலைமை அலுவலகத்தின் அறிவித்தலின் படி கடன் வழங்குவதை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளோம். புதிய கடன்கள் தற்காலிக மேலதிக பற்று ஆகியவற்றை நிறுத்தியுள்ளோம் என்று தெரிவித்துள்ளது.

மக்கள் வங்கியின் கடன் உதவியையே நம்பி சேவையாற்றி வந்த ப. நோ. கூ. சங்கங்கள் இக் கடன் நிறுத்தத்தால், நிதிநெருக்கடியில் உள்ளன என்று ப. நோ. கூ. சங்கங்கள் தெரிவித்தன.

உணவு முத்திரை நிலுவைப் பணத்தை அரசாங்க செயலகம் வழங்காததால நிதிக் கஷ்டத்தில் இருந்த எமக்கு வங்கியின் அறிவிப்பு மேலும் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-3)

## காசோலை - அடையாளக் கார்ட் மோசடிப் புள்ளி கைதானர்

கொழும்பு, ஜூலை 18

1980-ஆம் ஆண்டு முதல் காசோலை மற்றும் தேசிய அடையாளக் கார்ட் மோசடிகளில் ஈடுபட்டு வந்தார் என்று கருதப்படும் முக்கிய புள்ளி ஒருவரைப் பொலீஸார் கடந்த வாரம் கைது செய்தனர்.

அந்த நபர் தற்சமயம் கோட்டை நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

ஆயிரம் அமெரிக்க டாலர் பெறுமதியான காசோலை ஒன்றை அவர் மாற்றுவதற்காக இலங்கை வங்கிக் கிளை ஒன்றுக்கு அண்மையில் சென்று இருந்தார்.

அப்போது அவர் வங்கி அதிகாரிகளால் சந்தேகத்தின் மீது தடுத்து வைக்கப்பட்டார். பின்னர் பொலீஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார்.

விசாரணையின் போது அவரிடமிருந்து 18 காசோலைகள், 30 அடையாளக் கார்ட்கள் கைப்பற்றப்பட்டன. ஒரு காசோலை ஒருலட்சத்து 65 ஆயிரம் ரூபாவுக்கு எழுதப்பட்டிருந்தது. எல்லாக் காசோலைகளும் ஊழியர் சேமலாப நிதியத்தால் வழங்கப்பட்ட காசோலைகளே என்று அறிய வந்திருக்கிறது. (இ-எ)

## தமிழக விவசாயப் பல்கலைக்கழகம்: இலங்கை மாணவருக்கு 10 இடங்கள் ஒதுக்கீடு

கோயம்புத்தூர், ஜூலை 17

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் மாணவருக்கு 10 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சென்னை அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய 1989 தமிழ் நாடு தொழில் ரீதியான பயிற்சி நுழைவுத் தேர்வில் தகுதி பெற்ற பரீட்சார்த்திகள் வருகிற மாதம் 31 ஆம் திகதிக்கு முன் கோயம்புத்தூர் விவசாய பல்கலைக்கழக பதிவாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று தமிழ் நாடு அண்ணா பல்கலைக்கழகப் பதிவாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## இயற்கை வளம் அழிப்பு காரைநகரில் எதிர்ப்பு

காரைநகர் ஜூலை 18

காரைநகரில் இயற்கை வளத்தை அழிப்பவர்களுக்கு எதிராக பல பொது சேவை மன்றங்களும் இளைஞர் அமைப்புகளும் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

காரைநகரில் பனை வளம் அழிக்கப்பட்டு அவை வெளியூர்களுக்கு அனுப்பப்படுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது.

மழை வளம் குன்றியுள்ள இவ்வேளையில் இயற்கைவளத்தை அழிப்பது அநியாயமானது எனவும் அதிலும் பல நூறு வருடங்கள் சென்றாலும் வளர்த்து பயன்பெற முடியாத பனை வளம் அழிக்கப்படுவது மனித வாழ்க்கை பாதிக்கப்படுவதற்கு சமனாகும் எனவும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது. (ச 73)

## எழுச்சி - விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பாதயாத்திரை

### வரவேற்பு வைபவத்தில் உரை

சுன்னாகம், ஜூலை 18

''சமாதானத்துக்கும் சுபீட்சத்துக்குமாக மேற் கொள்ளப்படும் திருத்தல பாதயாத்திரை சைவ மக்கள் மத்தியில் எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தும்''

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் திருத்தல பாதயாத்திரையை மேற்கொண்ட ஆத்மஜோதி முத்தையாவையும் மற்றும் அடியார்களையும் வரவேற்று குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நடாத்தப்பட்ட வரவேற்பு விழாவில் கலைப் பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

வடமாநில சித்திர வித்தியாதிபதி திரு. ஆ. தம்பித்துரை விழாவுக்கு தலைமை வகித்தார்.

திரு. பொன்னுத்துரை தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

''தமிழ் நாட்டில் சைவசமயம் நலிவுற்று இருந்த வேளையில் நாயன்மார்கள் திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டு சைவசமய எழுச்சிகளை ஏற்படுத்தினர்.

எமது நாட்டில் நாவலர் பெருமான் சைவப் பிரசங்கங்கள் மூலம் சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

இன்று ஆத்மஜோதி முத்தையாவின் தலைமையில் சைவ அடியார்கள் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் தோறும் உள்ள சகல சைவ ஆலயங்களையும் தரிசித்து மக்கள் மனதில் ஒரு புத்துணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்;

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்ற வாக்குக்கிணங்க முதுபெரும் சைவ அறிஞர் ஆத்மஜோதியின் தலைமையில் நடைபெறும் இப் பாத யாத்திரை வருடா வருடம் தொடர வேண்டும். அவரதுமுயற்சிக்குச் சைவத் தமிழ் உலகுமுழு ஆதரவையும் வழங்கவேண்டும்.

இப்படி அவர் கூறினார். வவுனியா வ...

அரசாங்க அதிபர் திரு. பேதபத்மநாதன் ஆத்மஜோதி முத்தையாவுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

சைவப்பெரியார் திரு. மு. இராமலிங்கம் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினார்கள். (ச - 27)

## இன்று திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ் நகர ப. நோ. கூ. சங்கங்கள் இன்று செவ்வாய்க்கிழமை திறக்கப்பட வேண்டும் என்று ப. நோ. கூ. சங்கப் பதில் முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பு உணவு முத்திரைப் பொருள்களை வழங்கி முடிக்க வேண்டும் என்று விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின் பேரில் சகல கிளைகளையும், களஞ்சியங்களையும், காரியாலயங்களையும் திறக்க சகல ஊழியர்களும் சமூகமளிக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ-3)


## சின்னஞ் சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

இந்து வேளாள I.C.M.A. பட்டதாரி தனியார் கம்பனியில் வேலை பார்க்கும் 38 வயது மணமகளுக்கு வெளிநாடு செல்லவிரும்பும் மணமகன் தேவை. யாழ்ப்பாணத்தில் வீடு உட்பட சீதனம் வழங்கப்படும். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். No: 77 C/o உதயன். (11549)

யாழ்ப்பாண வேளாள கத்தோலிக்க லீவில் வந்த B.Sc. ஆசிரியைக்கு 35 - 45 வயதுக்கிடைப்பட்ட மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (11563)

### மணப்பெண் தேவை

யாழ் இந்து வேளாள அவுத்தாலியிலிருந்து இங்கு வந்த மணமகனுக்கு 28 - 34 வயதுக்கிடைப்பட்ட அவுஸ்திரேலியா - கனடாவை விரும்பும் மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம் (11562)

### மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்துவேளாள செவ்வாய்க் குற்றமுள்ள 26 வயது M.S.C மணப்பெண்ணுக்கு Doctor, Engineer, Accountant பட்டதாரி தேவை. வெளிநாட்டு மணமக்களும் விரும்பப்படுவர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (11561)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் பேடு பிறவுண் சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (19-7-89) புதன்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை. ரூ. 3/50) உடன் பதிவு செய்க. இல: 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகைவிரத நிலையத்திற்கு அண்மையில்.) (1091)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளை கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1052

## உடனடி வேலைவாய்ப்பு T. V. TRAVELS

● கனடா ● அமெரிக்கா ● அவுஸ்திரேலியா

நாட்டிற்குச் செல்வோருக்கு விசா, ரிக்கற் செய்து தரப்படும்.

✶ குறுகிய நேரத்தில் செய்து தரப்படும்

மற்றும்

● ஜேர்மன்

செல்வோருக்கு உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

● சவூதி அரேபியா

Cleaners 450 SR

✶ ஒரு மாதத்தில் பயணம் செய்யலாம்.

● KUWAIT நாட்டிற்கு

House Maid பெண்கள் (கிளினர்) 30 KD

மற்றும்

சவூதி, குவைத், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் பிரயாணம் செய்யலாம்.

T. V. TRAVELS

Brown Road, KOKUVIL.

(சி-3057)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி இராமநாதன் அன்னம்மா

மலர்வு: 01-07-1916　　உதிர்வு: 18-06-1989

எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டீர்களே!

எங்களிடம் எதையும் கூறாமல் மின்னல்போல் மறைந்தீர்களே! உங்கள் இனிய முகம் என்று காண்போம்?

18 - 7 - 1989 செவ்வாய்க்கிழமை (இன்று) நடைபெற இருக்கும் அந்தியேட்டி. வீட்டுக்கிருத்தியத்தில் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தையா வீதி,
கோயில் குடியிருப்பு,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(1213)

## பாஷாண உத்வாசன தின அழைப்பிதழ்

(20 07 1989 வியாழக்கிழமை)



அமரர்

### செல்வன் பா. விமலகுமாரன்

(சித்திரா - ஐயர்)

20-05-89 அன்று அகால மரணமடைந்த எமது அருமைச் செல்வனின் பாஷாண உத்வாசன தினத்தில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

— தந்தையும், சகோதரியரும்.

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை　(11555)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



● சண்முகநாதன் மயூர்தா (மயூ) ●

ஆண்டவன் படைப்பு: 21-04-1986　　ஆண்டவன் அழைப்பு 24-06-1988

அம்மா என்ற உந்தன் குரல்
அண்மையிலே கேட்குதம்மா!
அப்பா என்று அழைப்பது போல்
எந்நேரமும் தோன்றுதம்மா!
பால் வடியும் உந்தன் முகம்
கனவினிலே காணுகின்றோம்!
கண்மணியே உன் நினைவால்
கடுந்துயரில் வாடுகின்றோம்!
தூக்கியே நாம் வளர்த்த
தூயவளே உனை எண்ணி
துடிக்கின்றோம் நாமிங்கு
தூக்கமே இல்லையம்மா!
ஆண்டு ஒன்று சென்றிடினும்
உன் நினைவு அகலாதே
எம்மை விட்டு.

அப்பா, அம்மா, அக்காமார், தங்கை,
தாத்தா, பேத்திமார், மாமன்மார்,
அத்தைமார், சித்தப்பா, சித்தி, அன்ரி,
மற்றும் உறவினர்கள்.

புங்குடுதீவு-7　　(1214)

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் தம்பையா மகாதேவன்

(உரிமையாளர் தேவன் அன் கோ, வவுனியா)

தோற்றம்: 20. 03. 1934　　மறைவு: 28. 06. 1989

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து 18. 07. 1989 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் பத்தர் கேணியடி காரைநகர் இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தர் கேணியடி,
காரைநகர்.

மனைவி, மக்கள்,
பெருமக்கள், உறவினர்கள்.

(1200)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைமையை மறந்து புதிய உறவு; இந்திய - பாக். பிரதமர்கள் உறுதி!

இஸ்லாமபாத் ஜூலை 17

பகைமையை மறந்து இரு நாடுகளின் உறவுகளைப் புதுப்பிக்கவேண்டும் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி பாகிஸ்தானைக்கேட்டுக்கொண்டார்.

பாகிஸ்தான்பிரதமர் பெனுசிர் பூட்டோ அளித்த அரசு விருந்துபசார வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் பிரதமர் காந்தி இதனைத் தெரிவித்தார்.

பாரம்பரிய பகைமை உணர்வுக்கு இருநாடுகளும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். குரோத உணர்வை இருநாடுகளின் மக்களும் உள்ளத்திலிருந்து அகற்றவேண்டும்.

மக்களின் உறுதிதான் அரசாங்கத்திலும் தொனிக்கும். இருநாடுகளின் உறவுகளும் சிரடைய மக்களின் மனமாற்றம் அவசியமாகும்.

இப்படி பிரதமர் காந்தி சொன்னார்.

பிரதமர் பெனுசிர்பூட்டோ பேசுகையில் சொன்னதாவது:

இப்பிராந்தியத்தில் ஆயுதப்போட்டியை முடிவுக்குக் கொண்டுவர இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுக்கள் நடத்தவேண்டும்.

தெற்காசியப் பிராந்தியத்தை அணுஆயுத சூனியப் பிரதேசமாகக்பிரகடனப் படுத்தவேண்டும் என்று தெரிவித்தார்.

இரண்டு பிரதமர்களும் சியாச்சென் பனிமலைப் பிரதேச எல்லைப்புறத் தகராறு பற்றிப் பேச்சுக்கள் நடத்தினர் என்றும் பேச்சுக்களின் குறிப்பிடத்தக்கமுன்னேற்றம் காணப்பட்டது என்றும் பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (எ)

## காஷ்மீரில் கருத்துக் கணிப்பு இல்லையென ராஜீவ் அறிவிப்பு!

இஸ்லாமபாத், ஜூலை 17

காஷ்மீர், எந்த நாட்டுக்குச் சொந்தம் என்பதைத் தீர்மானிக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்த முடியாது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இஸ்லாமபாத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினை பேசித் தீர்க்கவேண்டிய ஒன்று என்று பாகிஸ்தான் பிரதமர் பெனுசிர் பூட்டோ இச்செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். [எ]

### மீண்டும் தடை

பர்மா அரசு மீண்டும் வெளிநாட்டுப் பத்திரிகையாளருக்கு தடை விதித்துள்ளது.

பர்மா பற்றி வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தவறான தகவல்களை வெளியிடுவதால் இத்தடை விதிக்கப்பட்டதாக பர்மா வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது. (எ)

## நோர்வே கடலில் விபத்துக்குள்ளான 3 ஆவது சோவியத் அணு நீர்மூழ்கி

ஒஸ்லோ, ஜூலை 17

சோவியத் யூனியனுக்குச் சொந்தமான அணு நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று நேற்று நோர்வே கடலில் விபத்துக்குள்ளானது.

கப்பலில் இருந்து புகை வருவதை நோர்வே அரசு விமானம் ஒன்று முதலில் அவதானித்தது.

உடனே ஒஸ்லோவில் உள்ள சோவியத் யூனியனின் தூதரை அழைத்துத் தனது ஆட்சேபனையை நோர்வே அரசு தெரிவித்தது.

கடந்த நான்கு மாதங்களில் நோர்வே கடலில் விபத்துக்குள்ளான மூன்றாவது சோவியத் அணுமூழ்கிக் கப்பல் இதுவாகும். (எ)

### ஆப்கன் நிலைமை

வாஷிங்டன், ஜூலை 17

ஆப்கானிஸ்தானில் உள்ள விமானநிலையங்களின் ஓடுபாதைகளைச் சேதமடையச் செய்யக் கூடிய ஆயுதங்களைக் கெரில்லாக்களுக்கு வழங்க அமெரிக்கா முவந்துள்ளது என்று வாஷிங்டனில் செய்திகள் வெளியாகின. (எ)

### சீனமாணவருக்கு சலுகை

அமெரிக்காவில் உள்ள சீன மாணவர்களை 1992 வரைத் தங்கியிருக்க அமெரிக்க செனட் ஏகமனதாக அனுமதித்துள்ளது.

மாணவர் கிளர்ச்சியை சீன அரசு இராணுவத்தைக் கொண்டு அடக்கியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.


உ

### அந்தியேட்டி அழைப்பு

அன்புடையீர்!

21 - 06 - 89 இல் சிவபதம் எய்திய எனது தந்தையும், புளியங்கூடல் சந்தி மகாமாரி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், புளியங்கூடல் மகாமாரியம்பாள் தேவஸ்தான தங்கம்மா மடாலய தர்மகர்த்தாவுமான

அமரர்

**வைத்திலிங்கம் வடிவேலு**

அவர்களின் அந்தியேட்டி 19-07-89 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு சாட்டி அந்தியேட்டி மடத்திலும் 20-07-89 வியாழக்கிழமை எமது இல்லத்தில் சபிண்டீகரணமும் நடைபெறும். எனவே மேற்படி வைபவங்களில் தாங்களும் குடும்ப சகிதம் சமுகந்தந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

வ. போசராசாவும் குடும்பத்தினரும்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை. [11565]


### சரவணை முருகன் ஆலய வேல் திருவிழா

குருநகர், ஜூலை 18

சரவணை மேற்கு, 2 - ஆம் வட்டாரம் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் 19 - ஆம் திகதி புதன்கிழமை பகல் 12.00 மணிக்கு வேல் திருவிழா நடைபெறும்.

1.00 மணிக்கு மெய்யடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இரவு 8.00 மணிக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய முன்றலில் தீக்குளிப்பு நடைபெறும்.

20 - ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழா நடைபெறும். (இ-51)

## வடக்கே உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்ல பெரிய படகுகள்

### திருமலைத்துறைமுகத்துக்கு அனுப்ப உத்தரவு

கொழும்பு, ஜூலை 18

உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வடமாகாணத்துக்கு செல்வதற்காக இரண்டு பெரிய படகுகளை (Barges) 'டக்' (tug) ஒன்றையும் திருகோணமலைத் துறைமுகத்துக்கு உடனடியாக அனுப்பி வைக்கும்படி இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண முதல்வர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்று வர்த்தக கப்பற்றுறை அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

மெர்க்கன்டைல் ஷிப்பிங் நிறுவனம் கரையோர சரக்குப் போக்குவரத்துச் சேவையை இடைநிறுத்தியதால் திருமலையில் இருந்து வடபகுதிக்கு உணவுப் பொருள்களை அனுப்பும் திட்டம் பாதிப்படைந்துள்ளது.

கரையோரக் கப்பல்களே பிரிமா துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு கோதுமை மாவை ஏற்றிச் சென்று வந்தன.

தற்போதைய போக்குவரத்துக் கஷ்டத்தைச் சமாளிக்க மீண்டு கரையோரக் கப்பல் சேவையை ஆரம்பிக்கும்படி வர்த்தக, கப்பற்றுறை அமைச்சரின் உதவி கோரப்பட்டது.

இப்படி அமைச்சுச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### கொழும்பில் நடந்தது

## தமிழரிடம் பொருள்களை பறி கொடுத்த தமிழர்

குருநகர், ஜூலை 18

குருநகர் இளைஞர் ஒருவர் கொழும்பில் வைத்து தமிழ் இளைஞர் கோஷ்டி ஒன்றிடம் தமது பொருள்களைப் பறி கொடுத்தார்,

இது பற்றிக் கூறப்படுவதாவது;

குருநகரைச் சேர்ந்த செபஸ்ரியன் என்பவர் கொழும்பில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த சமயம அங்கு ஆயுதங்களுடன் சென்ற ஐவர் அவரை வேறிடத்துக்கு அழைத்துச் சென்று அவர் அணிந்திருந்த சங்கிலி மோதிரங்கள், ரொக்கப்பணம் என்பவற்றை அபகரித்தனராம்.

பாதுகாப்புக் கருதி இங்கிருந்து கொழும்பு சென்று தங்கி இருந்த சமயமே மேற்படி கொள்ளை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளை நடத்தியவர்கள் அவரைத் தடுத்து வைத்து மேலும் பணம் கேட்டதாகத் தெரியவருகிறது.

அவர்களிடம் இருந்து தப்பிய இளைஞர் கொழும்பில் இருந்து இந்தியாவுக்குச் சென்று அங்கிருந்து குருநகரில் உள்ள தமது வீட்டுக்குத் தகவல் அனுப்பி வைத்துள்ளார். (இ-51)

### முல்லை. பட்டினத்தில் குப்பைகூழங்கள்

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு பஸ் நிலையம் குப்பை கூழங்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றது.

மழைகாலத்தில் ஒரே துர்நாற்றம் வீசுகிறது.

குப்பை கூழங்களை அகற்றுவதற்குச்சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். (க.92)

### இன்று கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

சில்லாலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாவில், திருமுழுக்கு, ஒளி வழிபாடு மங்கள இசையுடன், பிற்பகல் சிறப்பு நிகழ்ச்சியாக,

'தாயும் சேயும்' என்னும் பொருள்பற்றி, வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வர், முன்னாள் அதிபர் திரு. க. கயிலாயநாதன் பக்கவாத்தியங்கள் சகிதம் சங்கீதக் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். [க]

## பொங்கற்பானை பிரிந்தது! அமைச்சர்கள் ஏமாற்றம்!!

பொங்கல் பொங்கியபோது பொங்கற்பானை பிரிந்தது: இச்சம்பவம் கொழும்பு உயர்நீதிமன்ற வளாகக் கட்டடத்தில் இடம்பெற்றது.

நீதி அமைச்சு அலுவலகம் வியாழக்கிழமை உயர்நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டது.

இதை ஒட்டி புதிய அலுவலகத்தில் பொங்கல் நடத்தப்பட்டது.

பால் பொங்குவதை நீதி அமைச்சர் வின்சன்ட் பெரேரா, துணை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, நீதி அமைச்சுச் செயலாளர் பி. பி. ஹேரத் உட்பட அனைவரும் எதிர்பார்த்து நின்றனர்.

ஆனால் பால் பொங்கி வழிவதற்குப் பதிலாக பானையின் அடி பிரிந்து அடுப்புக்குள் பால் ஓடியது.

இதனையடுத்து பொங்கல் பொங்கும் திட்டம் கைவிடப்பட்டது. குத்துவிளக்கு ஏற்றப்பட்டு புதிய அலுவலகம் திறக்கப்பட்டது. (உ-எ)

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழர்விடுதலைக்கூட்டணிச் சயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், முன்னாள் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் ஆகிய இருவரதும் படுகொலைகள் குறித்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளது.

### மாமூடைகள் கொள்ளை!

வவுனியா, ஜூலை 18

கடந்த புதனன்று திருமலையிலிருந்து மா ஏற்றிவந்த தனியார் லொறி ஒன்றிலிருந்து 150 மூடை மா மதவாச்சிக்கும் வவுனியாவுக்கும் இடையில் வைத்து ஆயுதபாணிகளால் கொள்ளையடிக்கப்பட்டது. [உ-164)

### பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஜூலை 18

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் நடைபெறும் திருத்தலப் பாதயாத்திரை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. [க]

## அரச எழுதுவினைஞர்களுக்கு சுங்கத்திணைக்களத்தில் பதவி

கொழும்பு, ஜூலை 18

வெவ்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த பொது எழுதுவினைஞர் சேவையிலுள்ள அரச சேவையாளர்களை இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இடமாற்றம் பெறவிரும்புவோர் விண்ணப்பிக்கத் தேவையான பத்திரங்கள் சகலதிணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-7)

### தட்டெழுத்தாளர் சேவை வெற்றிடம்

கொழும்பு, ஜூலை 18

அரசாங்க தட்டெழுத்தாளர்கள் சேவையின் 1 ஆம் வகுப்புக்கான வெற்றிடங்களை தட்டெழுத்தாளர்கள் சேவை வகுப்பு II பிரிவு 'அ' வில் உள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதன் மூலம் நிரப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

31-12-1988 ஆம் திகதி வரை உள்ள வெற்றிடங்களே இவ்வாறு நிரப்பபபடவுள்ளன. (இ-7)

### தேவி ஸ்ரீ புரவில் தேடுதல்

நுவரெலியா ஜூலை 18

தலவாக்கொல்லையில உள்ள 'தேவி ஸ்ரீபுர, என்ற இடத்தில் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்துஅப்பகுதியை முற்றுகையிட்ட சுமார் 300 இராணுவத்தினர் அதிகாலை 4மணி முதல் தொடர்ச்சியாக நள்ளிரவு வரை பலத்த தேடுதலை நடத்தினர்கள். (ச-58)

### இத்தாவில் முருகமூர்த்தி ஆலய உற்சவம்

இத்தாவில் முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் இன்று பதினெட்டாம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும்.

ஆடி அமாவாசை தினமான ஆகஸ்ட் முதலாம் திகதி தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் பூர்த்தியடையும். (க-117)


## டக் உறுதிமிக்கது, நீடித்துழைக்கும் திறமை வாய்ந்தது

டக் - வலிமைமிக்க நம்பத்தகுந்த பாரம் ஏற்றி.
நீண்டதூரம் பொருட்களை ஏற்றிச் செல்ல மிகவும் விரும்பப்படுவது டக். நடைமுறை அறிவடிப்படையான பொறியமைப்பில் கடுகடுப்பாக அமைக்கப்பட்டது.
டக் ஒருபோதும் உங்களை ஏமாற்றம் அடையச் செய்யாது.
எல்லாவற்றிலும் மேலாக டக் மிகவும் குறைந்த எரிபொருளில் இயங்கக் கூடியது அருமையான சொத்து.
புதிய சிறப்புமிக்க டக்கில் அமைந்துள்ள ஒப்பிட்டுக் கணக்க முடியாத தொழில்நுட்ப இலட்சணங்கள்:-

★ வலுமிக்க ஸ்ரியறிங்.
★ இரு சுற்றுத் தடுப்பு (பிறேக்) முறை.
★ குறைந்த 'கியரில்' இயங்கக்கூடிய 'டிபரென்சியல்'.
★ ஒரு நேரவிசைவலைக் கண் (சிங்குரோமெஷ்) கொண்டகியர் பெட்டி.
★ மேலதிக பாரத்தைப் பொறுக்கக் கூடிய, வலுப்பெறச் செய்யப்பட்ட 'செசிஸ்கும்', திருத்தி அமைக்கப்பட்ட 'சஸ்பென்சனும்'.
★ துருப்பிடியாத தொப்பி மூடி. ★ 'எயர் ஹோண்'.
★ வானொலிப்பெட்டி. ★ 5 மில்லியன் ரூபா பெறுமதிக்கு மேலான உதிரிப்பாகங்கள்.
★ 12 மாதங்களுக்கு/30,000 கி.மீ. ஓடும் வரை உத்தரவாதம்.
★ 3 இலவச செவ்வித்தல்கள்.

முன்கையிருப்புக்கள் கிடைக்கும்.

விற்பனை நிலையங்கள்: 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



இலங்கையில் பிரதான ஏஜென்ஸ் -
பிறீ லங்கா ரேடிங் கொம்பனி லிமிட்டெட்
409, காலி வீதி, கொழும்பு - 3
தொலைபேசி: 575241 - 4. ரெலெக்ஸ்: 21147 பக்ஸ்: 575841

உதிரிப்பாகப் பகுதி:
168, நீர் கொழும்பு வீதி, பேலியகொடை.
தொலைபேசி: 530595, 530879.

உறுதிமிக்க நம்பத்தகு பாரம் ஏற்றி 'டக்' லொறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடற்றொழிலாளர்களே!**

3/4 மில்லி மீற்றர் ரேலர் மால், முக்கால், ஒன்று, ஒன்றரை, இரண்டு மில்லி மீற்றர் ரேலர் மடி நூல் வகைகள்- போயா, வலை நூல் வகைகள்- கடற்றொழில் உபகரணங்கள் எதுவாகினும் தெரிவு செய்ய நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

**சென். அன்ரனீஸ்**

40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



# உதயன்

18 07 - 1989 செவ்வாய்க்கிழமை



**ஜோண்சன் ✱ Johnson**
[10 H.P.]

வெளியிணை இயந்திரங்களையும், உதிரிப் பாகங்களையும் மலிவு விலையில் வடபகுதியில் கொள்வனவு செய்ய நம்பிக்கையான ஒரே இடம்.

**சென். அன்ரனீஸ்.**

40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


## வியாபாரிமூலையில் ஷெல்! சிசு, தாய், பெண் காயம்

வல்வெட்டித்துறை, ஜூலை 18
கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் வியாபாரிமூலைப்பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களில் 8 மாதக் குழந்தை உட்பட மூவர் காயமடைந்தனர்.

வேலாயுதம் கிருஷ்ண மோகன் என்ற எட்டுமாதக் குழந்தையும் குழந்தையின் தாயான வேலாயுதம் இராசமலர் (வயது 33 என்ற பெண்ணும், திருமதி ரி. சரஸ்வதி (வயது 45) என்ற மற்றொருவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்களில் திருமதி ரி. சரஸ்வதி மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் தாக்குதல்களை அடுத்து வியாபாரிமூலைப் பகுதி மக்களில் ஒருபகுதியினர் இடம்பெயர்ந்தனர். (உ-160)

## குளவிக்கூட்டுக்கு வைத்ததீ வீட்டையும் எரித்தது!

வல்வெட்டித்துறை, ஜூலை 18
குளவிக்கூட்டுக்கு வைத்த தீ கூரையையும் எரித்தது.

இந்தச் சம்பவம் பொலிகண்டியில் அண்மையில் நடந்தது.

வெங்காயப்பிடிகள் கட்டித் தொங்கவிடப் பாவிக்கப்படும் ஓலைவீட்டில் பெரிய குளவிக்கூடு ஒன்று காணப்பட்டது.

அதைக் கலைப்பதற்காக வீட்டுக்காரர்கள் ஓலைத்திப்பந்தம் பிடித்தபோது ஓலைவீடும் சேர்ந்து எரிந்து சாம்பரானது. (உ-160)

## இளம் பெண் சடலம்

குருநகர், ஜூலை 18
துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளம் பெண்ணின் சடலமொன்று நேற்றுக் காலை மார்டீன் வீதி, வேம்படிச் சந்தியில் கிடக்கக் காணப்பட்டது. சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ-51)

## மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா ஜீப்மீது துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பு, ஜூலை 18
மட்டக்களப்பு அரசடிச் சந்தியில் ஸ்ரீ லங்கா படையினரின் ஜீப் மீது நேற்று துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

ஜீப் சிறிது சேதம் அடைந்த போதிலும் எவரும் காயமடையவில்லை.

துப்பாக்கி பிரயோகம் செய்த நபர்கள் யார் என்பது அடையாளம் காணப்படவில்லை. (இ-21)

## சமாதானம்அமைதிவேண்டி உழைத்த தலைவர்கள்

### இந்தியத் தூதர் இரங்கல்

கொள்கைச் சுடர்களாகஇரு தலைவர்களும் விளங்கினர்கள்: சமாதானத்திற்கும் அமைதிக்கும் அயராது உழைத்தார்கள்.

—இவ்வாறு இந்தியத்தூதர் திரு. மெக்ரோத்தா தமது இரங்கலுரையில் தெரிவித்தார்.

அவர்களுடன் பலமுறை பேசியுள்ளேன். அவர்கள் கூறிய விடயங்கள் இன்னும் என்காதில் ஒலிக்கிறது.

அவர்கள் உயர்ந்த ஒருசக்தியாக விளங்கினர்கள் — என்றார். (உ-3)

## நெல்லியடியிலும் ஷெல்

வல்வெட்டித்துறை, ஜூலை 18
நெல்லியடி, கரவெட்டிப் பகுதியில் நேற்றுக்காலை 7-30 மணியளவில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

கன்பொல்லை இராசகிராமம் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினல் ஒரே வீட்டைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த சடையன் முருகேசு (வயது 65) முருகேசு கந்தசாமி (வயது 46) ஆகிய இருவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஷெல் தாக்குதல்களினல் சில வீடுகள் சேதமுற்றன.

இப்பகுதி மக்களும் இடம்பெயர்ந்து வருகின்றனர். (உ-160)

## கம்பஹா பொலீஸ் தாக்குதல்: இன்ஸ்பெக்டர் ஒருவரும் 2 கான்ஸ்டபிள்களும் பலி!

கொழும்பு, ஜூலை 18
கம்பஹாவில் பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது கடந்த ஞாயிறு அதிகாலை மூன்று மணியளவில் ஜே. வி. பி. தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் ஒருவரும், இரண்டு கான்ஸ்டபிள்களும் உயிரிழந்தனர்.

ஒரு சப் இன்ஸ்பெக்ரும் மற்றொரு கான்ஸ்டபிளும் காயமடைந்தனர். ஆயுதங்களும் அபகரித்துச் செல்லப்பட்டன.

பொலீஸ் நிலையத்திலிருந்த மலசலகூடம் ஒன்றில் அதிகாலை வேளை குண்டு ஒன்று வெடித்ததாகவும்—

இந்த அதிர்ச்சியில் உள்ள இருந்தோர் பொலீஸ் நிலையத்தை விட்டு வெளியே ஓடி வந்தனர் என்றும்—

அந்த நேரத்தில் 20 பேர் கொண்ட தீவிரவாதிகள் குழு ஒன்று திடீர் தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்தே கம்பஹாவின் பல் வேறு இடங்களிலும் 13 மணி நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது (உ-1)

## தமிழரசு, ஈழம் இணைப்பு எனப் போராடிய தலைவர்

### ஈரோஸ் பிரமுகர் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 18
தமிழரசு, தமிழ்ஈழம்வட—கிழக்கு இணைப்பு என்று போராடியவர் தளபதி அமிர்தலிங்கம். இப்போது இணைப்பு நிலைபெற்று உரிமைகள் முழுமையாகக் கிடைக்கஉழைப்பதே நாம் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாகும்.

—இப்படிக் கூறினர் ஈரோஸ் பிரமுகர் திரு. இரத்தினசபாபதி.

தமது 40 ஆண்டு அரசியலில் அமிர் பலதரப்பட்ட வகையில் போராடினர்.

**நான் அரசியலில் ஈடுபட அடிஎடுத்துத் தந்தவர்அவரே அவரது சேவை தமிழ் மக்கள் மறக்க முடியாது— என்ருர்.**

முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதி ஜனப். அபூபக்கர் பேசுகையில் —

முஸ்லிம் மக்கள் பிரச்சினைக்காக குரல் எழுப்பியவர்அமிர் என்ருர்

முஸ்லிம் மக்களை தமிழினத்திலிருந்து பிரிக்காமல் ஒரினம் என்று குரல் எழுப்பியவர் அவர். சகல விடுதலை இயக்கங்களையும் ஒன்று சேர்த்து ஓர் அணியில் கொண்டு வருவதே நாம் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாகும் என்றும் அவர் சொன்னர்.

தமிழகத்திலிருந்து வந்திருந்த இரா. ஜனர்த்தனன், கோவைத்தம்பி, திருமதி. டி. யசோதா, திரு. ராகவானந்தம் திரு. எஸ். ஏ. காஜா மொஹிதீன் மாவை சேனதிராஜா ஆகியோரும் இரங்கல் உரை நிகழ்த்தினர்கள். (உ-3)

### இன்று அமிர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
றது.

அவர்கள் பெட்டியில் இருந்து ஒருசெய்தி கூறுகிருர்கள். பலாத்காரம் மூலம் விமோசனம் காணமுடியாது என்பது தான் அச்செய்தி''.

கூட்டணித் தலைவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் காமினி திஸாநாயக்கா இப்படிக் கூறினர்.

இந்தியப்படை ஒரு நோக்கத்தோடு இங்கு வந்தார்கள். அவர்களை வாபஸ்பெறச் செய்வதை சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே செய்ய வேண்டும்.

தமிழர்கள் எமது சகோதரர்கள். கடந்த காலங்களில் நாம் தவறுகளை இழைத்திருந்தாலும், இன்று அவற்றுக்குரிய தீர்வைக் காணவேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்ருேம்.

இன்று நாம் உறுதி மொழி ஒன்றை எடுக்கவேண்டும். எமது பிரச்சினைகளைச் சமாதானவழியில் பேசித் தீர்ப்போம் என்பதுதான் அது — என்று அமைச்சர் மேலும் சொன்னர். (உ-3)

### புதிதாக---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
னர்.

இந்த நிலையில் இந்தச் சம்பவத்தில் உயிர்தப்பிய ரு. எம்.சிவசிதம்பரத்தின் வாக்கு மூலம் தவிர வேறு பயனுள்ள தகவல்கள் ஏதும் பொலீஸாருக்குக் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-1)

## சார்க்கில் பங்குபற்றுமாறு இலங்கையை வற்புறுத்த பாக். அமைச்சர் வருவார்

இஸ்லாமபாத் ஜூலை 18
பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் கொழும்புக்கு விரைவில் விஜயம் செய்யவிருக்கிருர்.

சார்க் அமைப்பு உச்சி மாநாட்டை பகிஷ்கரிப்பது என்ற இலங்கையின் நிலைப்பாட்டை கைவிடும்படி கோரவே பாகிஸ்தான் அமைச்சர் இலங்கை விஜயம் செய்யவிருக்கிருர்.

இந்தியப் பிரதமருடன் சேர்ந்து நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ, தனது வெளியுறவு அமைச்சரை கொழும்புக்கு அனுப்பவுள்ள செய்தியை வெளியிட்டார். (உ எ)

### தீர்வு காண...

ழர் சமுதாயம் முன்னேற நாம் பாடுபடுகிருேம். அழகிய தீவின் மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாம் எம்மையே அர்ப்பணித்துள்ளோம்.

-இப்படி அவர் கூறினர். (உ-3-10)

## ஸ்ரீலங்கா சிப்பாய் சுட்டு இந்திய ஜவான் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை18
திருகோணமலை பிரட்டெரிக் கோட்டைப் பகுதியில் இந்திய இலங்கைப் படைவீரர்களுக்கு இடையில் ஞாயிறு காலையில் ஏற்பட்ட சச்சரவில் இந்திய ஜவான் ஒருவர் உயிரிழந்தாகவும் ஒருவர் காயமடைந்தகாகவும் கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

இந்திய ஜவான்களுடன் உரையாடிக் கொண்டிருந்த இலங்கைச் சிப்பாய் ஒருவர் இந்திய ஜவான்களின் துப்பாக்கி ஒன்றை திடீரென எடுத்து அவர்களை நோக்கிச் சுட்டதாகக் கூறப்பட்டது. (உ-1)

## காலக்கெடுவை ராஜீவ் .. .. ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
படுத்தும்.

சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே அமைதிப் படையை விலக்கிக் கொள்ள இந்தியா விரும்பியது. இதனை இலங்கை அரசு ஏற்கவில்லை.

இஸ்லாமபாத்தில் கடந்த ஆண்டு நடந்த சார்க் மாநாட்டின் போது அப்போதைய ஜனதிபதி ஜெயவர்த்தனவுடன் இது குறித்து நான் விவாதித்தேன். தனக்குப் பின்னர் ஜனதிபதியாகப் பதவி ஏற்கவிருக்கும் ரு. பிரேமதாஸா தான் இது குறித்து முடிவு எடுக்க வேண்டும் என்று திரு. ஜெயவர்த்தன அப்போது என்னிடம் தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்தபடியால் அங்கு ஜனதிபதி தேர்தல் மாகாணசபை தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை அமைதியாக நடத்த முடிந்தது.

ஜூலை 29 க்கு முன்னர் அமைதிப்படை விலக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்கமுடியாது —என்ருர்.

கேள்வி: அப்படியானல் இந்திய படைகளுக்கும் இலங்கைப் படைகளுக்கும் இடையே மோதல் ஏற்படும் ஆபத்து இருக்கும் என்று கருதுகிறீர்களா?

ராஜீவ் காந்தி (Better sense will prevail) அறிவு பூர்வமான உணர்வு நிலவும் என்று நம்புகிறேன்.

பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ள பாரிஸ் சென்று இருந்தேன்.

அங்கு பல உலகத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினேன்.

அமைதிப்படை விலகல் தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள தகராறு பற்றி உலக நாடுகள் கவலை தெரிவிக்கவில்லை எல்லா உலக நாடுகளின் தலைவர்களுடனும் நான் பேசினேன். ஒருவராவது இலங்கைப் பிரச்சினை பற்றி என்னிடம் கேட்கவில்லை.

ஜனதிபதி கோர்பச்சேவுடனை பேச்சுக்களிலும் இலங்கைப் பிரச்சினை இடம் பெறவில்லை

நான் அறிந்த ஒரே ஒரு விஷயம், இலங்கை பற்றி ஒருவராவது கவலைப்படவில்லை என்பதே.

அமைதிப்படை விலகல் பற்றிய பேச்சுக்களை முறித்துக் கொண்டது இலங்கை ஜனதிபதியே.

இந்த நெருக்கடியை இலங்கை அரசு கையாளும் விதத்தை நான்கண்டிக்கின்றேன். இரு நாடுகளின் தலைவர்களுக் கிடையே [illegible] புகலையே இலங்கை பகிரங்கப்படுத்தி வருகிறது. இரு நாடுகளுக்கு இடையேஉறவை வளர்க்க இம்மாதிரியான நடவடிக்கை உதவாது.

அமைதிப்படை விலகல் பற்றி பேச்சு நடத்த எமது அரசு முன்வந்தபோதும் அது பற்றிப் பேச பிரேமதாஸா மறுத்துவிட்டது குறித்து நான் வருந்துகிறேன்.

—இப்படி பிரதமர் காந்தி சொன்னர்.

### இஸ்லாமாபாத்தில்

இதேவேளை புதுடில்லி புறப்படும் முன்னர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுக்காலை பிரதமர் பெனஸிருடன் சேர்ந்து இணைசெய்தியாளர் மாநாட்டை நடத்தினர்.

அப்போது இலங்கைப் பிரச்சினை பற்றி ராஜீவ் காந்தி சொன்னதாவது:

அமைதிப்படை இலங்கைக்குப் போய் இருக்காவிட்டால் இலங்கை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே பிளவுபட்டு போய்இருக்கும்.

இலங்கையில் ஸ்திர நிலையை உண்டாக்கவே அமைதிப்படை அங்கு சென்றது.

இலங்கை பிளவுபட்டுவிடாமல் அமைதிப்படையினர் தான் தடுத்து வருகிருர்கள்.

அமைதிப்படை இருக்கும் இடங்களில் மட்டுமே இலங்கையில் சட்டம், ஒழுங்கு பேணப்படுகிறது.

அமைதிப்படையை விலக்கச் சொன்னதன் மூலம் சார்க் அமைப்பின் எதிர்காலத்தையே இலங்கை பாழடித்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் நேபாளம் தகராறுகளுக்கு தீர்வுகாணுவதில் இந்தியா மிரட்டிப் பயமுறுத்தும் ஒரு பிராந்திய அடாவடியாக செயல்படவேயில்லை.

— இப்படி பிரதமர் காந்தி சொன்னர். (உ-எ)

### விரிவுரைகள் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று விரிவுரைகள் ஏதும் இடம்பெறவில்லை. (ஒ)

### பூதவுடல்கள் தீயுடன்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இடமான மூளாய்க்குச் சென்றது.

மற்றைய ஹெலிக்கொப்டர் திரு. யோகேஸ்வரனின் பூதவுடலுடன் யாழ் கோட்டைப் பகுதியை வந்தடைந்தது.

மூளாயில் பாடசாலை ஒன்றுக்கு அருகாமையில் இறங்கிய ஹெலிக்கொப்டரில் இருந்து அமிர்தலிங்கத்தின் பூதவுடல் தாங்கிய பேழை இறக்கப்பட்டு ஊர்வலமாக அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானேர் கலந்துகொண்டனர்.

அதேபோன்றுதிரு.யோகேஸ்வரனின் பூதவுடல் தாங்கிய பேழை நண்பகல் அளவில் கோட்டையில் இருந்து அவரது நல்லூர் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பின்னர் திரு. அமிர்தலிங்கத்தின் பூதவுடல் ஹெலிகொப்டர் மூலம் யாழ் கோட்டை மைதானப் பகுதியையும் மாலை 3.00 மணி அளவில் வந்தடைந்தது. இதற்கு சிறிது நேரத்துக்கு முன் நல்லூர் இல்லத்தில்இருந்து திரு.யோகேஸ்வரனின் பூதவுடல் வாகனம் மூலம் கொண்டுவரப்பட்டது.

பூதவுடல்கள் இரண்டும் கோட்டை தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

இந்தக்கொட்டகைக்கு அருகில் வைத்தே இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டன.

திரு. அமிர்தலிங்கம் சார்பாகஅவரது மகன்மார்களான காண்டீபன். டாக்டர் ரவி ஆகியோரும் திரு. யோகேஸ்வரன் சார்பாக அவரது சகோதரர் டாக்டர் இராமநாதனும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் பூதவுடல்கள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த இரு வெவ்வேறு சிதைகளுக்குப் பக்கத்தில வைக்கப்பட்டன.

அங்கு இடம்பெற்ற இரங்கல் உரைகளை அடுத்து தகனத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சிதைகளைச் சுற்றி பேழைகள் எடுத்துச் செல்லப்பட்டன. குடிமக்கள் தொண்டர் படையினர் மரியாதை வேட்டுக்களைத் தீர்த்தனர். இந்திய அமைதிப் படையினரின் பாண்ட் வாத்தியக் கோஷ்டியினர் சோக கீதம் இசைத்தனர்.

சிதைகளில் இருந்து தீ மூண்டுகொண்டிருந்த சமயம் கூடி இருந்த மக்கள் அங்கிருந்து அமைதியாக கலைந்து சென்றனர். (இ-10-3)

### பரீட்சை--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளில் இறுதியாண்டுப் பரீட்சைகள் நடத்தப்படுவது இயலாத காரியம் என்று அரசு கருதுகிறது. இதனல் இறுதிப் பரீட்சையை வைக்காமலேயே இறுதியாண்டு பல்கலைக்கழக மாணவருக்குப் பட்டங்களை வழங்குவது பற்றி அமைச்சர் மட்டக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

இக்குழுவின் தலைவராக அமைச்சர் லலித் அத்துலத் முதலி நியமிக்கப்பட்டிருக்கிருர். மற்றும் 5 அமைச்சர்கள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் காரணமாக வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களும் இறுதியாண்டுப் பரீட்சைகளை வைக்காமல் பட்டங்களை வழங்கியிருப்பதையும் அரசு வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (உ-எ)

### தேஷ்முக் ,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரியைச் சிறப்புத் தூதராக அனுப்புவதே இலங்கை அரசுக்குக் கொடுத்த ''ஒரு சமிக்ஞை'' என ராஜீவ்காந்தி நினைத்ததாகவும் கூறப்பட்டது.

ராஜீவ்காந்தி தேஷ்முக்கை இலங்கைக்கு அனுப்பும் முடிவைக் கடந்த 9ஆம் திகதி பிற்பகலில் எடுத்தார். இதிலிருந்து 'ரோ' அமைப்பின் இயக்குநர் திரு. ஆனந்தவர்மாவும், ஐ. பி. இயக்குநர் எம். கே. நாராயணனும் தேஷ்முக்கிற்குப் பல விடயங்களை விளக்கினர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் இலங்கைப் பிரச்சினை குறித்து நுணுக்கமான அம்சங்களை அவருக்கு எடுத்துரைத்தனர்.

இதனை அடுத்தே திரு தேஷ்முக் இலங்கை வந்து பேச்சுக்களில் கலந்துகொண்டார்.

தேஷ்முக்கின் முயற்சியால்—எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் அனைத்து தமிழ்ப் போராளிகள் குழுக்களின் பிரதிநிதிகளும் தமிழகத்தில் வைத்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேச இணங்கியிருப்பதாகவும்—

இந்தச் சந்திப்பின் மூலம் தமிழ்க் குழுக்களிடையே இணக்கமான ஒரு சூழ்நிலை உருவாகும் என்றும் புதுடில்லியில் பத்திரிகைச் செய்திகள் உறுதியாகத் தெரிவித்தன.

## ஒட்டுசுட்டானில் பதற்றம்

ஒட்டுசுட்டானில் பதற்ற நிலை நிலவுகின்றது. இக்கிராமம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டானூடாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பஸ் போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டுள்ளது. தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்துக்கான பக்தர்கள் வரவும் குறைவடைந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல், ஒட்டுசுட்டானில் இருந்து முல்லைத்தீவு நோக்கி ரோந்து சென்ற இராணுவ வாகனங்கள் மீது கருவேலன் கண்டல் என்னும் இடத்தில் வைத்து சிலிண்டர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவச் சுற்றிவளைப்பு இடம்பெற இதுவே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-126-113)

### 1,000பேர் கைது

வாரஇறுதியில் இலங்கை ஆயுதப் படையினர் தென் பகுதியில் நடத்திய பெரும் தேடுதல் வேட்டையின்போது சுமார் ஆயிரம் தீவிரவாத சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

### கடை திறக்க அனுமதி

குருநகர், ஜூலை 18
நாளை புதன்கிழமை கடைகளைத் திறப்பதற்கு வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் அங்கத்தவ நிலையங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. (க-51)


## மரண அறிவித்தல்

### செல்வன் சி. தயானந்தராசா

வரணி இடைக்குறிச்சி காலஞ்சென்ற முன்னைநாள் உபதபால் அதிபர் சிற்றம்பலம் அவர்களின் கனிஷ்ட புத்திரன் செல்வன் சி. தயானந்தராசா (ஞானவேல்) 15- 07- 1989 இல் அகாலமரணமடைந்துள்ளார். இவர் காலஞ் சென்ற சிற்றம்பலம் மற்றும் திருமதி அபிராமி சிற்றம்பலம் அவர்களின் கனிஷ்ட புத்திரனும், சி. துரைராசா (கொத்தணி அதிபர், வரணிமகாவித்தியாலயம்), திரு. சி. திருச்செல்வராசா (லண்டன்), திருமதி வா. செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. க. வாரித்தம்பி (பதிவாளர், நீதிமன்றம் சாவகச்சேரி), யின் அன்பு மைத்துனரும், செல்விகள் வா. கீதாஞ்சலி (ஆசிரியை யா/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, வரணி), பகீரதி, வாசுகி, மேனகா, அகலிதாவின் அன்பு மாமனுருமாவார்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்ருேம்.

தகவல்: க. வாரித்தம்பி.

இடைக்குறிச்சி,
வரணி.

(11564)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-07-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது